d No.

சிவமய...

"வீரசைவ...

பொம்மபுரம்

ஸ்ரீ சிவஞானபாலைய சே...

அருட் கோ...

தமிழ்நாட்டு வீரசைவ ம...

கழகத்தில...

செந்தமிழ்த் திங்க...

மலர் க | விபவ ஆண்டு தைத் தி... 1929 — ஜனவரி. | இதழ க

க. முன்னுரை :—

உ. ஓர் வேண்டுகோள் :—

ந. ஐந்தாம் ஆண்டு விழாத் தலைவர் முன்னுரை.

ச. வீரசைவ பஞ்சாசாரிய பீடங்களும், அவற்றின் தோன்மையும் :—

ரு. தென்னாட்டு நிகழ்ச்சிகள் :—

சு. வடநாட்டு நிகழ்ச்சிகள் :—

எ. இஷ்டலிங்க வபிஷேக மாலையுரை :—

பத்திராதிபர், வீ. குமாரவீரய்யர், 'வீரசைவநிலையம்' முசிரி, திருச்சி ஜில்லா.

விவேகபாநு பிரஸ் பிராஞ்சு, குளித்தலை.

சவம்.'

ரவலர் : —

நானபாலையசுவாமிகள் அவர்கள்.

கத்தார் :—

மி ஐயரவர்கள், சிதம்பரம்.

,, திலிங்க ஐயரவர்கள், பெருவளகல் [லூர்

௩. ,, சிவப்பிரகாச ஐயரவர்கள், அரும்பாவூர்.

௪. ,, S. வேலாயுத ஐயரவர்கள், சோரத்தூர்.

௫. ,, V. குமாரவீரய்யர் அவர்கள், முசிரி.

பத்திராதிபர் :— வீ குமாரவீரய்யர்.

சந்தா விவரம்.

ஆயுட் சந்தா முன்பணம் :—	...	25–0–0
ஆண்டுச் சந்தா :—	...	2–0–0
மாணவர்கட்கும், உறுப்பினர்கட்கும்: —		1–8–0
தனியிதழ் :—		0–4–0

உ

ளக்கு மிடியற் குறுபொருளா மிறைவற் கரசாங் கூற்றுவனை
ரிக்கும் பிணிக்கு மருந்தாகும் விடத்திற் கருஞ்சீர்க் கலுழனும்
ாக்கும் பகைக்குப் படையாகு மலடர்க் கரிய மகவாகுந்
ளக்குங் கருணைச் சிவஞான தேவன் றிருக்கைத் திருநீறே.

17 JUL 1981

ஸ்ரீமத் ஞானராஜதானியான இனாம் பொம்மபுரம் திருக்கைலாய பரம்பரை பெரியமடம் சிவகஞ்சி மயூராசல நிவாசயதீஸ்வரகர்த்தரான மயிலந் தேவஸ்தான ஆதீன பரம்பரை தர்மகர்த்தத்துவம் இனாம்தார் **ஸ்ரீ சிவஞானபாலைய சுவாமிகள் மகாசந்நிதானம்.** இவர்கள் இளமையிலேயே கல்விபயின்று சாஸ்திரப் பயிற்சியும் அறிவும் ஆற்றலும் அமைதியும் பெருங்கருணையும் உடையவர்களாய், பிரபவ-ஹு மாசி-மீ பூர்வபக்ஷம் பட்டாபிஷேகஞ் செய்விக்கப்பெற்று வீரசைவ சமயந் தழைத்தோங்குகவென வீரசிங்காதனத்தமர்ந்தருளினார்கள்.

ஸ்ரீசிவஞானபாலையசுவாமிகள் திருவடி வாழ்க.

உ

சிவமயம்.

"வீரசைவம்."

பொம்மபுரம் ஸ்ரீ சிவஞானபாலயதேசிக சுவாமிகள்
அருட் கோடையால்,
தமிழ்நாட்டு வீரசைவ மகாசங்கத்து நிறைவேற்றற்
கழகத்தினின்று வரும்
செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

மலர் க	விபவ ஆண்டு தைத் திங்கள். 1929 — ஜனவரி.	இதழ் க

முன்னுரை.

"நன்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
றன்கடன்னடி யேனையுந் தாங்குதல்
என்கடன்பணி செய்து கிடப்பதே."

அறிவிற் சிறந்து விளங்கும் மாட்சிமிக்க பெரியோர்களே !

முதற்கண் என்றன் மனமுவந்த வணக்கம் இறைவர்க்கும் உங்கட்கும் உரியதாகுக !!

மேலேவரைந்துள்ள அமிழ்தினும் இனிய தமிழ்மொழிச்சுவை ததும்பும் திருமறையாகிய தேவாரத் திருப்பாசுரத்தின் பின்னிரண்டடிகளும், 'எல்லாம்வல்ல இறைவராகிய சிவபெருமான் மக்கள் முதலிய ஆன்மாக்களைத் தாங்குதலே அவர்க்குரிய கடமை' என்றும், 'மக்கள் முதலிய ஆன்மாக்கள் அவ்விறைவரது அடிச்சார்ந்தொழுகி அவர் மகிழும்பணிகளைச் செய்து கிடப்பதே தமக்குரிய கடமை' என்னும் நோக்குவார் யாரும் உணர விளங்க வுணர்த்திநிற்கின்றன.

இறைவர்க்கு ஆலயம் நிறுமித்தல், அவ்வாலயத்தில் திருவலகிடல் முதலியன செய்தல், வலம்வந்து பணிந்து மலர்தூவித் துதித்தல் முதலிய பணிகள் இறைவர்க் கியற்றும் பணிகளே யெனினும், அவ்விறைவரால் தாங்கப்பெறும் உயர்பிறப்பினராகிய மக்களனைவரும் இம்மை மறுமைப்பயன்களை எளிதில் அடைதற்குரிய நெறிகளை ஆராய்ந்து ஏற்றவுதவிகளைத் தமக்குரியகடமையென வுணர்ந்து உவப்புடன் கைம்மாறு கருதாமற் செய்தலே அவ்விறைவர் மகிழச்செய்யும் சிறந்த பணியாம்.

உணர்ச்சியுடைய பெரியார், தம்மனம் மொழி மெய்களைத் தூய்மையுடையனவாக்கிச், சித்தத்தைச் சிவபெருமான் எழுந்தருளுதற்குரிய ஆலயமாக்கிச், சிவானந்தத்தேனை எந்நாளும் இனிதுண்டு களிக்கும் பெருஞ்செல்வராயிருந்தும், அப்பெருமானது அருட்சத்தியின் துணையால், பிறப்புவகையால் தம்மோடொத்த வுலகினரை அறிவு முதலியவற்றாலும் தம்போடொத்தவராக்குதற்குரிய பலநன்மைகளைச் செய்து வந்திருக்கின்றனர். இப்பெரியார் இதுவே இறைபணியென வுணர்ந்து தம்முடல் பொருளாவி மூன்றையும் உலகினர்க்குப் பயன்படும்படிச் செய்துவந்தமையாற்றான் இவ்வுலகியல் இடையீடின்றி நடைபெற்றுவருகின்றது. இப்பெரியாரே தனக்கெனவாழாப் பிறர்க்குரியாளராம் நமது சமயாசாரியராவர்.

இங்ஙனம் மிகப் பழமையானகாலத்திற்கு முன்னரே அவதரித்து மதத்தாபன முதலியனசெய்து மக்களை உயர்நிலைக்குக்கொண்டு வந்த நமது வீரசைவ பஞ்சாசாரியர்முதல் பலநூற்றாண்டுகட்கு முன்னர் அவதரித்து மதச் சீர்திருத்தஞ்செய்த பசவேசர் இறுதியாக எண்ணப்படும் பெரியாரனைவரும் உலகினர்க்குச்செய்த வுபகாரச் செயல்களெல்லாம் சூர்ந்தாய்ந்து மகிழத்தக்க அரும்பெருஞ்செயல்களாம்.

இப்பெரியாரனைவரும் உலகத்தவர்க்குச் செய்த வுபகாரச்செயல்கள், கருத்துவகையால் ஒத்தனவாயினும், காலவியல்புக்கேற்ப அவ்வப்பொழுது அவர்கள் கையாண்டமுறைகள் பலதுறையாக விரித்துகொண்டே வந்திருக்கின்றன. இம்முறைகளை நன்குணர்ந்த பேரறிவாளர்கள் இப்பொழுதும் மக்களை உயர்நிலைக்குக் கொண்டுவர ஆங்காங்கு பலநன்மைகளைச் செய்துவருதலைக் கண்கூடாகவும் பத்திரிகைவாயிலாகவும் காண்கின்றோமல்லவா?

உலகின்புறக்கண்டு தாமின்புறுந் தகைமையாளர்களே!

இவற்றையெல்லாம் ஆராய்வோமாயின், நமது வீரசைவ சமூகத்தையும் மிகப் பழமையான சமயத்தையும் உயர்நிலைக்குக் கொண்டு வர இக்கால வியல்புக்கேற்பப் பற்பல விடங்களில் சமயச்சார்பான சங்கங்களை நிறுவுதல், கல்விச்சாலைகளைத் தாபித்தல், மாணவர்க்கு விடுதியமைத்தல், உலகநிகழ்ச்சிகளையெல்லாம் ஒரேகாலத்தில் ஓரிடத்திலிருந்தே உணர்தற்குக் கருவியான பத்திரிகையை வெளியிடுதல் முதலிய அருஞ்செயல்களைச் செய்தல் நமது கடமையன்றோ!

இம்முறைகளை முன்னரே நன்குணர்ந்த நமதுவடநாட்டு வீரசைவப் பெரியார்கள், தங்கள் நாட்டில் வீரசைவர்கட்கெனத் தனித்த பல பாடசாலைகள், பல சங்கங்கள், பல மாணவர் விடுதிகள், அநாதையாலயங்கள் முதலியவற்றை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். இன்னும் மைசூர், புனா முதலிய அந்நாடுகளில் தினப்பத்திரிகை 1 ம், வாரப்பத்திரிகை 7 ம், மாதப்பத்திரிகை 1-ம், கால் வருடப்பத்திரிகை 1-ம் ஆகப் பத்துப் பத்திரிகைகள் வீரசைவர்கட்கெனவே வெளிவந்துலவுவனவாயின் அவ்வடநாட்டார் கொண்ட முயற்சியும் அதனால் அந்நாட்டில் விளைந்துள்ள பயன்களும் எந்நாட்டவராலும் பாராட்டி மகிழ்தற்குரியனவாயிருக்கின்றன.

இம்முயற்சிகளில் சித்திரகல் துருகம் ஸ்ரீமந் மகாராஜ நிரஞ்சன ஜகத்குரு ஜயதேவ முருகராஜேந்திர மகா சுவாமிகள் செய்துவருகின்ற பேருதவிகள், அவர்கள் பெயரால் காணப்படும் பற்பல அறங்களாலேயே வெளியாகின்றனவன்றோ! இவர்களே தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராவர்.

இந்நன்முறையில் இத்தமிழ்நாட்டு வீரசைவர்களும் உயர்நிலைக்கு வரவேண்டிச் சிவபெருமான் திருவருட் செயலால் ஆறுவருடங்கட்கு முன்னரே முதற்கண் தமிழ்நாட்டு வீரசைவ சித்தாந்த மகாசங்கமொன்று நிறுவப்பெற்றது. இதன் பயனாகப் பற்பல விடங்களிலிருந்து ஒருவரை யொருவர் அறியாராகிய பல வீரசைவர்களும் ஒருங்கே கூடி இன்புறும்பேறு கிடைத்தது. இக்கழகம், இரண்டாவதாண்டு விழாவின்கண் 'வீரசைவம்' எனப் பெயரிய மாதப்பத்திரிகையொன்று வெளிவரும்; அதனை யாதரித்தல்வேண்டுமெனத் தன்னெண்

ணத்தை வெளிப்படுத்திற்று. மூன்ருவதாண்டு விழாவின்கண் பொம்ம புரம் 17-வது பட்டம் மகாசந்நிதானத்தால் புரந்தருவதாக வாக்களிக் கப்பெற்று 'சிவஞானதேசிகள்' என்னுஞ்செல்வப்பெயரால் அழை க்கவும் பெற்றது. நான்காவதாண்டில் பாராட்டுவாரின்றி மௌனநிலை யிலிருந்துவந்தது. ஐந்தாவதாண்டு விழாவின்கண் திருத்தவத்துறை (லால்குடி) யில் தவங்கிடந்து, அவ்விழாவின்கண் தலைமைவகித்த திரு வாளர் G. C. வீரப்பா B. A., L. L. B. அவர்கள், கொள்ளேகாலம் நாட்டாண்மைக் கழகத் தலைவர் திருவாளர் G. P. மல்லப்பா அவர்கள் இவர்களை யுள்ளிட்ட அறிவாளர்களனைவரும் இப்பத்திரிகையைப் பலரும் அறிய 'வீரசைவம்' என்னும் இயற்பெயராலேயே அழைத் தல் வேண்டும் என்றும், இவ்வைந்தாவதாண்டில் இவ் வீரசைவக்குழ ந்தையைக் கல்வி பயிலவைத்து ஆருவதாண்டு நிரம்புதற்குள் கட்டு ரையாளராகிய ஆசிரியராலும் கழகத்தாராகிய போற்றுபவராலும் வெ ளிவந்துலவி நாடெங்கும் சொற்பொழிவு செய்யச் செய்விக்கவேண்டு மென்றும் எடுத்துரைக்கக் கழகத்தாரும் அங்ஙனமே முயல்வதாக வாக்களித்தார்கள்.

ஆயினும், தக்கதோர் புரவலருடைய ஆதரவுபெற்றே வெளி வரவேண்டுமெனத் தாழ்த்திருந்த இவ் 'வீரசைவம்' என்னும் ஓர் மதிக்குழவி, வீரப்பா என்னும் ஆண்டகையைத் துணையாகக் கொண்டு மயூராசலத்தையடைந்து, அங்கெழுந்தருளியுள்ள முருகப் பெருமானது முழுநோக்கமும் பெற்று, அப்பெருமானுடனுறையும் பொம்மபுரம் 18-வது பட்டம் ஸ்ரீமத் சிவஞானபாலைய சுவாமிகள் மகிழ்வுடனேற்று ஆதரிப்பதாகக்கூறிய அருண்மொழி வாக்கைச் சிர மேற்கொண்டு இப்பொழுதே வெளிவந்துலவி தன்னரிய செயலைச் செய்ய முன்வந்துள்ளது.

இம்மதிக்குழவியைப் புரவலராகிய சந்நிதானம் புரத்தல்செய்ய, போற்றுவாராகிய கழகத்தார் போற்றிநிற்க, 'இம் மதிக்குழவிக்குரிய தொண்டினை அணிமையிலிருந்து செய்க' எனக் கட்டளையிட இத் தொண்டாற்றுதற்கு அறிவானும் ஆற்றலானும் செயலானும் உலகிய லனுபவத்தாலும் சிறந்துள்ள தக்கார் பலரிருந்தும் கழகத்தாரிடுங் கட் டளையை மறுத்தற்கஞ்சியும், இத்தொண்டாற்றலால் தூய்மையனுகலா மெனக் கருதியுமே இப்பெருஞ் செயலை ஏற்றுக்கொள்வேமாயினேம்.

இதன்கண், வீரசைவ சமயாசாரியர்கள் ச்ரித்திர ஆராய்ச்சி, வீரசைவ மதத்தின் உண்மைநிலை, சமயாசாரியர்தாபித்த பீடங்களின் வரலாறு, வீரசைவ சமய நூலாராய்ச்சி, நந்தமிழ்மொழி நலன்களின் ஆராய்ச்சிக்கட்டுரை, வடமொழி கன்னடம் முதலிய பாஷையிலுள்ள வீரசைவ நூல்களின் மொழிபெயர்ப்பு, தென்னாட்டு வடநாட்டு நிகழ்ச்சிகள், சமூகமுன்னேற்றத்திற்குரியவழிகள் இன்னோரன்ன பலவும் அறிஞரால் எழுதப்பெற்று வெளிவரும்,

இதனைத் திருந்திய செந்தமிழ் மொழியில் வேற்றுமொழிக்கலப்பின்றி யெழுதி வெளிவரச்செய்தல், தமிழாகிய தெய்வத்தாய்க்கியற்றும் முதற்கடமையாயினும் இக்காலத்திய தமிழ்மக்கள் யாவரும் எளிதில் படித்துணரும்படியெழுதி நாளடைவில் திருந்தச்செய்யலாமெனக் கருதியுள்ளேமாதலின் புலமை மிக்கார் பொறுத்தருள்வாராக.

அரிதில் வெளிவந்துலவும் 'வீரசைவம்' என்னும் இச்செந்தமிழ்த் திங்கள் வெளியீட்டை வீரசைவரனைவரும் சைவரும் தமிழ் மொழி நலங்கருதுந் தகமையாளரும் ஆராய்ச்சியாளரும் சந்தாதாராகச் சேர்ந்தும் கட்டுரையெழுதியும் இன்னும் பலவுதவிகளைச் செய்தும் போற்றிப் பாராட்டவேண்டுகின்றோம். சுபம்! சுபம்!!

பத்திராதிபர்.

'ஓர் வேண்டுகோள்.'

வீரசைவ சமய வைராக்கிய சீலர்களே!

யான் ஒருசிறுவன். ஆயினும், தமிழ்நாட்டிலும், கன்னடம் தெலுங்கு இந்தி இந்துஸ்தான் பாஷைகள்பேசும் மைசூர் புனு பாம்பே பல்லாரி காசி முதலிய இடங்களிலும் வீரசைவர்கள் வசிக்கும் பெரும்பாலான பாகங்களிலெல்லாம் சஞ்சரித்து அவர்களுடன் கலந்து பழகிய சிறிது அநுபவமுடையேன்.

வடநாடுகளில் வீரசைவர்களில் பல அரசர்களும் மடாதிபதிகளும் பெரிய வியாபாரிகளும் உயர்ந்த வுத்தியோக பதவிபெற்ற

வர்களும் வேதாத்தியயன சாஸ்திரிகளும் இருக்கின்றார்கள். அவர்கள், சிலவருடங்களில் முன்னிருந்த ஸ்திதியிலும் பலமடங்கு இப்பொழுது உயர்ந்தநிலையை அடைந்திருக்கின்றார்கள். இவற்றிற்கெல்லாம் அந்நாடுகளில் பல வீரசைவபத்திரிகைகள் பலவருடங்களாக வெளிவந்துலாவி அங்குள்ள வீரசைவர்களை முன்னேற்றமடையச்செய்ததுவே காரணமென்னலாம். தென்னிந்தியாவிலோ அதிலும் இத்தமிழ்நாட்டிலோ வீரசைவர்கள், அதிகமாக இருந்தும் அவர்களிருக்குமிடமே தெரியாமலும், ஒருவர் நிலைமை மற்றொருவர்க்குத் தெரியாமலும், மேன்மையுற்றோங்கிவந்த மடங்கள் நிலை குலைந்து தோன்ற 'வீரசைவர்கள் உண்டோ இல்லையோ' எனப் பிறமதஸ்தர்களும் வடநாட்டு வீரசைவர்களும் எண்ணத்தக்க பரிதாபகர நிலைமையிலிருக்கின்றனர். இக்குறையை நீக்குவதற்கு இதுவரை யாரும் தகுந்த முயற்சிசெய்திருப்பதாகவுந் தெரியவில்லை. இந்தியாவிலுள்ள பத்துமதங்களில் வீரசைவமதம் அதன் ஜனத்தொகையில் ஐந்தாவதாக இருந்தும் இந்நாட்டில் வீரசைவர்கள் இல்லையென்றுகொள்ளும் சாதாரண அபிப்பிராயத்திற்கு இந்நாட்டார் அடிக்கடி சபைகளைக்கூட்டாமலும் பத்திரிகையை வெளிவந்துலவச் செய்யாமலும் வீணாக இருந்ததே காரணம் என்னலாம்.

இரண்டு மூன்று வருடங்கட்குமுன்னர் பொம்மயபாளயத்திற்கூடிய மூன்றாவது மகாநாட்டில் பொம்மபுரம் வீரசைவ பீடாதிபதிகள் பத்திரிகை ஒன்றை வெளிப்படுத்தவேண்டுமெனத் தீர்மானித்தார்கள் எனக் கேள்விமூலமாகவும் பத்திரிகை வாயிலாகவும் கேட்டு மகிழ்ச்சியடைந் தெதிர்பார்த்தேன். அப்படி வந்திருக்குமானால் இதுவரை எவ்வளவோ நன்மைகளை உண்டுபண்ணியிருக்கும்.

கடவுளருளாலும், பெரியார் ஆதரவினாலும், தமிழ்நாட்டு வீரசைவ சித்தாந்தமகாசங்கத்தினர் ஊக்கத்தினாலும் இவ்வருடம் மேமீ 24, 25-உகளில் லால்குடியில் நிறைவடைந்த தென்னிந்திய வீரசைவ மகாநாட்டின்கண் தீர்மானித்தபடி ஸ்ரீமத் ஞானராஜதானியான பொம்மயபாளயம் பெரியமடம் சிவகஞ்சி மயூராசல நிவாசயதீஸ்வர கர்த்தரான மயிலம் தேவஸ்தானம் ஆதீன பரம்பரை தர்மகர்த்தத்துவம் இருந்தார் ஸ்ரீ சிவஞானபாலைய சுவாமிகளுடைய பொருளுதவியால் '**வீரசைவம்**' என்னும் மாதத்தமிழ்ப்பத்திரிகை இப்பொழுது வெளிவந்துள்ளது.

இது, முற்காலத்தில் செழித்தோங்கிப் பல்லாயிரவர்க்குப் பேருதவிபுரிந்து விளங்கிவந்த வீரசைவ மதத்தின் உண்மைநிலையைத் தெரிவித்து மதசேவையையும் தேசசேவையையும் செய்யப் பிறந்துள்ள அறிவும் அழகும் வாய்ந்த குழந்தையாயிருக்கின்றது. இச்சிறு குழந்தையைப் பெற்றோர் ஏழைநிலைமையிலிருக்கும் வீரசைவ ரனைவரும், அபிமானிக்குந் தன்மையுள்ள மற்றவர்களும் பொருட்சகாய முதலியவை செய்து பாராட்டி வளர்த்தற்குரிய பொறுப்புடையராகின்றனர்.

இன்னும், இப்பொழுது வீரசைவ பீடாதிபதியாக விளங்கும் பொம்மபுரம் மகாசந்நிதானம் இக்குழந்தையைப் பாதுகாக்கவேண்டுமென விண்ணப்பித்துக்கொண்டவுடனே அங்கிகரித்துச்செய்த ஆசீர்வாத மொழிக்காக வீரசைவரனைவரும் அடிமையுற்றவராதல் வேண்டும். ஷை சந்நிதானம் வீரசைவ பாடசாலையொன்றேற்படுத்த முயன்றுகொண்டிருப்பதையும், மயிலம் ஸ்ரீசுப்பிரமணியசுவாமிக்குச் செய்துகொண்டிருக்கும் அருமையான வேலைகளையும்பார்க்க, பின்னிட்டிருக்கும் வீரசைவர்களை முன்னேற்றமடைவிக்க அவதரித்திருப்பதுபோல்தோன்றுகின்றது. தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்து உலகப்பிரக்கியாதிபெற்று விளங்கும் பசவாதிகணங்களைப் போல் பொம்மயபாளயம் மகாசந்நிதானமும் இக்காலத்தில் வீரசைவர்களை நல்லநிலைமையில் நிறுத்த எப்பொழுதும் வேண்டியவுதவிகளைச் செய்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. இப்பத்திரிகையையும் தடைபடாமல் நடத்திவருவார்கள் என்பதிலும் முழுநம்பிக்கையுண்டு.

இவர்கள் துணையிவ்வாறிருப்பினும் பலரும் செய்யவேண்டிய வேலைகள் பலவுள்ளன. அவ்வவ்விடங்களில் நடக்குஞ் சமாசாரங்களையும் விலாசங்களையும் எழுதியனுப்புதல்வேண்டும். பெரு முயற்சிகொண்டு சந்தாதாரர்களைச் சேர்த்தல்வேண்டும். வடநாட்டாரைப் போல் கல்யாண முதலிய சுபகாரியங்களில் தமக்கியன்றவாறு பொருளுதவிசெய்தல் வேண்டும். இத்தன்மையான பேருதவிகளைச்செய்து இவ்வீரசைவக்குழந்தையை நன்றாக வளர்ந்துவரச்செய்து இந்நாட்டிலும் வீரசைவர்கள் முன்னேற்றமடைந்திருக்கிறார்களென்பதைக் காட்ட முன்வருவீர்களென்று நம்புகின்ற,

ஓர் மதசேவகன்.

உ

தமிழ்நாட்டு வீரசைவ சித்தாந்த மகாசங்கத்து ஐந்தாவதாண்டு விழாவின்கண் தலைமைவகித்த திருவாளர் G. சிக்க வீரப்பா B. A., L. L. B. அவர்கள் செய்த,

முன்னுரை.

சிவநேயச் செல்வர்களே! சகோதர சகோதரிகளே!!

அடியேன், தமிழ்நாட்டைச்சேர்ந்த டெங்கணிக்கோட்டையிற் பிறந்தவனுயினும், எனது பெரும்பான்மையானகாலத்தைக் கன்னட தேசத்திற் கழிக்கநேர்ந்தமையால், யான் கூறும் மொழிகளில் கன்னட சமஸ்கிருத பதங்கள் கலக்கக்கூடும். ஆயினும் குழந்தையின் மழலைச்சொற்கேட்டு மகிழ்ச்சியுறும் பெற்றோர்களைப்போல என் சொற்பொழிவிலிருக்கும் குற்றங்களை நீக்கிக் குணத்தையேகொண்டு ஆசிகூறும்படி வேண்டுகின்றேன்.

அறிவினும் ஆற்றலினும் அனுபவத்தினும் என்னிலும் பன்மடங்கு உயர்ந்து விளங்கும் பலபெரியோர்களிருக்க, அடியேனுக்கு இம்மகாநாட்டுத் தலைமைவகிக்கும் பெரும்பேற்றைக் கொடுத்ததற்காக உங்களனைவோர்க்கும் என் மனமுவந்த வணக்கம் உரியதாகுக. ‘ மறுமைக்குதவும் அறமாகிய செல்வம் நிரம்பப்பெற்றுள்ள உங்களிடம் அதனைப்பெறுதற்கு முதற்காரணமாகிய அறிவாகிய பிச்சையைப் பெறுதற்கு வந்ததேயன்றி நுங்கள்பால் அரியதொன்றனைக் கூறிப் புகழ்பெறுதற்கு அடியேன் வந்தவனல்லன், என்பதை ஞாபகப்படுத்திக்கொள்ளுகின்றேன். ஆயினும், யான் சமூகவளர்ச்சியிலும், தேசமுன்னேற்றத்திலும், ஆசாரச் சீர்திருத்தங்களிலும் சிறிது கவலைகொண்டவனுகையாலும், வீரசைவர்களிருக்கும் பலவிடங்கட்குச்சென்று கலந்து பழகிய சிறிது அனுபவமுடையேனுகையாலும் அவ்விஷயமாய்ச் சிறிதுஎடுத்துரைக்க உங்களன்பார்ந்த அனுமதியை வேண்டுகின்றேன்.

இப்பூவுலகின்கண் பகலும் இரவும் எவ்வாறு மாறி மாறி வருகின்றனவோ அவ்வாறே ஒவ்வொரு தேசத்தின் நிலைமையோ அல்லது மதத்தின் நிலையையோ அடுத்தடுத்து நல்ல நிலைமையிலேயும்

இழிவான நிலைமையிலேயும் பிறழ்ந்துவருவதை மக்களாகியநாம் கண்கூடாகக் காண்கின்றோம். பல நூற்றாண்டுகளுக்குமுன் பலவழியிலுந் திருந்தவேண்டிய முறையிலிருந்த பிறநாட்டார் தாம் கொண்டிருக்குமுயற்சியால் எத்துறையிலும் உயர்ந்தநிலைமையிலிருப்பதைக் காண எவ்வளவு வியப்பைக்கொடுக்கின்றது! இன்னும் அவர்கள் தங்கள் மதத்தின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டுவருவதையும், அதனால் அவர்கள் மதம் முன்னேற்றமடைந்துவருவதையுங்கண்டு அவர்களது முயற்சிக்கு மகிழாதவர் யாருளர்!

சகோதர சகோதரிகளே! நாம் பிறந்துள்ள வீரசைவமதமானது, முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானால் உண்டாக்கப்பட்டது என்றுங் கூறலாம். இம்மதம் பண்டைக்காலந்தொட்டு இந்நாட்டில் மேன்மைபெற்றுவந்ததே. முற்கூறியவாறு "வாழ்வு சிலகாலம் தாழ்வு சிலகாலம்" என்னும் முதுமொழிக்கிணங்க, எங்கும் பேரொளிபரப்பி உயர்ந்த நிலைமையிலிருந்துவந்த நம்மதமானது, பிற்காலத்தில் மற்ற மதங்களின் படர்ச்சியாலும், சுயநலங்கருதுஞ் சூழ்ச்சியாளரின் வஞ்சகச் செய்கையாலும் சமயவாதிகளின் அஜாக்கிரதையாலும் சீர் குலைந்துநிற்கின்றது. "புலிபசித்தாலும் புல்லைத்தின்னாது" என்ற பழமொழிக்கேற்ப எவ்வளவு சீர்குலைந்து காணப்படினும் தன்னுயர்ந்த தத்துவங்களைமட்டிலும் நம்மதம் இன்னும் இழந்துவிடவில்லை. வீரசைவத்தின் முற்காலத்திய பெருமையையும் ஆட்சியையும் வீரசைவமதநூல்களும் மடங்களும் க்ஷேத்திரங்களும் நன்கு காட்டுகின்றன. அங்ஙனமிருப்ப வீரசைவ மதம் பன்னிரண்டாம் நூற்றாண்டில் பசவேசர்காலத்தில் தோன்றியதாகச் சிலர்கருதுவது மிகத் தவறாகும். வீரசைவ மதம் மிகத் தொன்மையது என்பதற்குப் பல ஆதாரங்களுண்டு.

கி. பி. 1125-ம் ஆண்டில் சக்கரபாணி ரங்கநாதர் என்பவர் பால்குருகி சோமநாத ஆராத்தியரோடு சமயவாதஞ்செய்து தோல்வியடைந்து வீரசைவராயினர். கி. பி. 1165-ம் ஆண்டில் திரிபுவன தாதா என்னும் பார்ப்பனரொருவர் பத்ராஜு என்னும் வீரசைவருடன் வாதஞ்செய்து தோல்வியுற்று வீரசைவக்கொள்கையை மேற்கொண்டனர். மேலும் மேற்குறித்த காலத்திலேயே காலமுகர் என்பவர் வீரசைவ சங்க மொன்று தாபித்து சமயாராய்ச்சிசெய்திருந்ததாக மைசூரைச் சேர்ந்த பாளேஹள்ளி என்னுமிடத்திலுள்ள சிலாசாசனங்கள் கூறுகின்றன. பத்தாம் நூற்றாண்டின் சிலாசாசனங்க

ளும் இதனையே கூறுகின்றன. பத்தாம் நூற்றாண்டின்சிலாசாசனங்களில் மல்லிகார்ச்சுனர், மருளாராத்தியர், விஸ்வாராத்தியர் என்ற வீரசைவர்களுடைய பெயர்கள் காணப்படுகின்றன. ஏழாம் நூற்றாண்டில் காலமுகர் தென்னிந்தியாவிற்கு வந்து வீரசைவ மதத்தைப் பரவச்செய்தார்என்றும்சிலாசாசனங்களாலேயேதெரியவருகின்றது. ‘ஆந்நகிரி’ என்பவர் எழுதியிருக்கும் சங்கரதிக்விஜயம் என்னும் புத்தகத்தில் வீரசைவருக்கும் சங்கரருக்கும் வாதம்நடந்ததென எழுதப் பட்டிருக்கிறது. சங்கா விஜயம் என்னும் புத்தகத்தால் ஸ்ரீ சங்கரருடைய தாயார் சிவபெருமானை ஜங்கம ரூபமாகப்பாவித்துப் பூசை செய்தார் என்றும் தெரியவருகின்றது. இத்தகைய காரணங்களால் வீரசைவ மதம் ஸ்ரீ சங்கரர் காலமான எட்டாம் நூற்றாண்டுக்கு முன்னும் இருந்திருக்கிறது என்று உறுதியாகின்றது. ஸ்காந்த புராணம் சங்கர சம்ஹிதையில் ஸ்வேதனுடைய மகனான பிங்களனென்னும் அந்தணர் சதானந்த முனிவர் உபதேசத்தால் வீரசைவரானார் எனக் கூறப்படுகின்றது. பாரதகாலத்தில் இம்மதம் இருந்தது என்பதற்கு, தருமபுத்திரருக்கும் பீஷ்மருக்கும்நடந்த சம்பாஷணை ஆதாரமாயிருக்கிறது. அஜாமிளன் என்பான் தன்மனைவியுடன் பிரமாணஞ்செய்து கொண்டிருக்குங்கால் வழியில் திருடர் வருவதைக்கண்டு தங்களிடமிருந்த ஆபரணங்களையெல்லாம் ஒரு சிறு துணியிற்கட்டி இலிங்கதாரணம்போற் கழுத்திற் கட்டிக்கொள்ள, திருடர் தலைவனான மித்ரகுப்தனென்பான் அவ்விருவர்களைக்கண்டு வீரசைவரென நினைத்து உபசரித்துத் துன்பப்படுத்தாம லனுப்பினான் என்று காமிகாகமத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. இதுகொண்டு வீரசைவ மதம் காமிகாகமகாலத்திற்கு முன்னிருந்ததென்றும், வீரசைவ மதத்தார்களிடம் திருடர்களுக்கும் பக்தியிருந்ததென்றும் தெரியவருகின்றது.

கௌதம ஸ்மிருதி யசுர்வேதம் ரிக்வேதம் இவைகளில் வீரசைவமதம் அக்காலத்தி லிருந்ததென்று சொல்லப் பல ஆதாரங்கள் உண்டு. பிரம சிருட்டிக்குமுன் பரமேச்சுரன் தன் பஞ்சமுகங்களிலிருந்து வீரசைவ மூலபுருஷர்களான பஞ்சாசாரியர்களைச் சிருட்டித்தார் என்று வீரசைவ மூலகிரந்தங்கள் கூறுகின்றன. இவர்கள் கடூர்ஜில்லாவிலுள்ள **ரம்பாபுரி**, பல்லாரிஜில்லாவிலுள்ள **உஜ்ஜயினி**, **ஸ்ரீசைலம்**, இமயமலையிலுள்ள **பதரிகேதாரம்**, காசி க்ஷேத்திரமென வழங்கும் **வாரணாசி** முதலிய ஐந்திடங்களிலும் தம்முடைய சிம்மாதனங்களைத் தாபித்து வீரசைவ மதத்தைப் பரவச்செய்தார்

கள். பஞ்சாசாரியர்களுள் ரம்பாபுரி வீரசைவ சிம்மாதனக் கர்த்த ரான ஸ்ரீ இரேணுக கணநாதர், அகத்திய மாமுனிவருக்கு வீரசைவ சித்தாந்தத்தைப் போதித்து இலங்கைக்குச் சென்று விபீஷணர் விருப்பத்தின்படி மூன்றுகோடி இலிங்கப் பிரதிட்டைசெய்து காஞ் சீபுரம் முதலிய தலங்கட்குச் சென்று ஆங்குள்ளா ரனைவர்க்கும் வீர சைவ சமயத்தைப் போதித்துப் பின் ஸ்ரீஉருத்திரமன்னியு முனிவர் பெருமானுக்குப் பட்டாபிஷேகமும் செய்தருளினர்.

இப் பஞ்சாசாரிய மடத்தைச் சார்ந்த உட்பிரிவு மடங்கள் பல நமது நாடெங்குமிருக்கின்றன. மற்றும் சித்திரகல் துர்க்கம், உப்பள்ளி முதலிய விடங்களிலிருக்கும் சூனிய சிம்மாசனாதிபதிகளும் அவற்றின் கிளைமடங்களின் தலைவர்களும் பற்பல விடங்களில் மதத் திற்குரிய பல நன்மைகளைச் செய்துவருகின்றனர். முற்காலத்தில் ஒவ்வொரு சிறு மடத்திற்கும் சுற்றிலும் பல கிராமங்கள் சேர்ந்திருந் தன. ஆங்காங் கேற்படும் வழக்குகளையெல்லாம் அந்தந்த மடாதி பதிகளே விசாரித்து நீதிசெலுத்திவந்தார்கள். இன்னும் அக்காலத் தில் சிறுவர்களுக்குக் கல்வி கற்பிக்கக்கூடிய பல போதனை மடங்கள் ஏற்பட்டிருந்தன. உதவியற்ற ஏழைச் சிறுவர்கட்கு இனமாக உண் ணவுணவும், உடுக்க வுடையும் கொடுத்துப் படிப்பையும் போதித்து வந்தனர். இம்மடாலயங்களிலேயே பிரயாணிகட்கும் அன்னமளித்து வந்தனர். அக்காலத்தில் வீரசைவ மடாதிபதிகள் பற்பலவிடங்கட் குச்சென்று மததருமங்களைப் போதித்துப் பரோபகாரத்தில் தம் வாழ்நாளை வீணாளாக்காது செலவழித்துவந்தனர். தென்னிந்தியா வில் திருக்குடந்தை (கும்பகோணம்) முதலியவிடங்களில் ஸ்ரீசாரங்க தேவர் வீரசைவ சிம்மாசனாதிபதியாக விருந்து, உலகத்திற்கான பல நன்மைகளைச் செய்துவந்திருக்கின்றனர். ஒவ்வொரு யுகத்திலும் மகாசீலர்கள் அவதாரஞ்செய்து தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்து பல நற்காரியங்களைக் கடைப்பிடித்து ஒழுகிவந்திருக்கின்ற னர். இத்தகைய பிரபல ஆதாரங்களால் மிகத் தொன்றுதொட்ட தெனக் கருதத்தக்க வீரசைவ மதத்தைப் பன்னிரண்டாம் நூற்றாண் டில் ஸ்ரீபசுவேசர் காலத்திற்றான் தோன்றியதெனக் காலவரையறை கூறுவது மிகத்தவறென்பது அறிஞர்க்குப்புலனாகாதுபோகாதன்றோ! இதுபோன்ற தவறுகளெல்லாம் நம்நாட்டில் இடைக்காலத்தில் ஆராய்ச்சிக் கட்டுரையெழுதும் பதவியிற் புகுந்த சூழ்ச்சியாளரின் குறுகியவறிவால் நேர்ந்தனவென்றே கருதத்தக்கன. (தொடரும்)

வீரசைவ பஞ்சாசாரிய பீடங்களும் அவற்றின் தோன்மையும்.

உலகத்தில் யாவரும் பிறர் சூழ்ச்சியினின்றுந் தப்பி விழித்தெழுந்து தத்தம் மதிப்பைப் பெறுதற்கு முயலும் முன்னேற்றமான இக்காலத்தில் வீரசைவர்களும், தம் சமய முன்னேற்றத்திற்கும் தங் குழுவினர் இருவகைச் செல்வத்தாற் பெருகுதற்கும் இன்றியமையாத அரிய செயல்களைச் செய்யத் தாங் கடமையுற்றவர் என்பதை மறக்கற்பாலரல்லராதல்வேண்டும்.

ஆதலின், முதற்கண்ணதாகிய வீரசைவ சமய முன்னேற்றத்திற்குரியனவாக வீரசைவ தத்துவநிரூபணஞ்செய்தல், வீரசைவமத தருமங்களின் பரந்த நோக்கமும் அதன்பரோபகாரமும் இன்னவை என எடுத்துக்காட்டல், வீரசைவம் பிராமண்யம் உடையது எனவிவரித்தல், வீரசைவ பீடங்களையும் பீடாதிபதிகளையும் காலவாராய்ச்சியுடன் அறிவித்தல் முதலியன வேண்டற்பாலனவாகலின், முன்னர் வீரசைவ பஞ்சபீடங்களின் வாலாற்றினைச் சிலாசாசனமுதலிய தக்க சான்றுகளுடன் வெளியிட்டுப் பின்னர் ஏனைய மூன்று அரிய செயற்கண்ணும் புகுதத்துணிந்த எமக்கு இத் திங்கள் வெளியீடு இப்பொழுதே இடந்தந்துதவ வெளிவருவதாயிற்று; இங்ஙனங் கூட்டிவைத்த இறைவன் றிருவருளை என்றும் பரவுவேமாக.

வீரசைவமதம், வைதீகமானது அநாதியாக வுள்ளது என்பதற்கு அம்மதத்தை உலகத்திற்றுபித்த பூருவாசாரியர்களுடைய சரித்திரங்களே பிரமாணங்களாகின்றன. வீரசைவாகமங்களின்படி இவ்வாசாரியர்கள் ஐவராவர். அதுபற்றியே அவர்கட்குப் பஞ்சாசாரியர்களென்றும், அவர்கள் தாபித்த குருபீடங்கட்குப் பஞ்சாசாரிய பீடங்கள் அல்லது பஞ்சசிங்காதனங்கள்என்றும் பாராட்டப்பெறும் புகழ்ச்சி நூலின்கண்ணேயன்றி உலகின்கண்ணும் இன்றும் நின்று நிலவுகின்றது.

இந்த ஆசாரியர்களுடைய காலம் மிகப் பழமையதாகின்றது. இவர்கள் நான்கு யுகங்களிலும் வேறு வேறு பெயர்களுடன் அவதரித்து வீரசைவ சித்தாந்தத்தைத் தாபித்திருக்கின்றார்கள். இதன்

விளக்கமனைத்துஞ் சிவாகமங்களிற் கூறப்படுகின்றன.

ஸ்ரீமத் பஞ்சாசாரியர்கள், கிருதயுகத்தில் ஏகாக்ஷரசிவாசாரியர், துவிதாக்ஷர சிவாசாரியர், திரியாக்ஷரசிவாசாரியர், சதுராக்ஷர சிவாசாரியர், பஞ்சாக்ஷரசிவாசாரியர் என்னுந் திருப்பெயர்கொண்டு அவதரித்தார்கள். திரேதாயுகத்தில் ஏகவக்திரசிவாசாரியர், துவிவக்திரசிவாசாரியர், திரிவக்திரசிவாசாரியர், சதுர்வக்திரசிவாசாரியர், பஞ்சவக்திரசிவாசாரியர் என்னும்பெயர்களைத்தரித்து அவதரித்தனர். துவாபரயுகத்தில் இரேணுகசிவாசாரியர், தாருகசிவாசாரியர், கண்டாகர்ணசிவாசாரியர், தேனுககர்ணசிவாசாரியர், விஸ்வகர்ணசிவாசாரியர் என்னும் நாமத்துடன் அவதரித்தனர். கலியுகத்தில் இரேவணசித்தசிவாசாரியர், மருலசித்தசிவாசாரியர், ஏகோராமசிவாசாரியர், பண்டிதாராத்திய சிவாசாரியர், விஸ்வாராத்திய சிவாசாரியர்என்னும் பெயர்களைத்தரித்து அவதரித்தார்கள் என்றும், — நான்கு யுகங்களிலும் அவர்கள், கொல்லிபாகத்தில் சோமநாதர், வடவிருக்ஷத்தில் சித்தேஸ்வரர், கேதாரத்தில் இராமநாதர், ஸ்ரீசைலத்தில் மல்லிகார்ச்சுனர், காசியில் விசுவநாதர் என்னும் இவ்வைந்து மகாலிங்கங்களிலே அவதரித்துப் பின்னர் இவ் வீரசைவ மதத்தைப் பரிபாலித்தற்காக ரம்பாபுரி உஜ்ஜயினி இமாலயம் ஸ்ரீசைலம் காசி இந்நகரங்களில் தருமபீடங்களைத் தாபித்தார்கள் என்றும் 'சுப்பிரபோதாகமம்' 'ஸ்வாயம்பு வாகமம், என்னும் இரண்டாகமங்களும் விளக்கமாகக் கூறுகின்றன.

இத்தகைய பிரமாணங்கள் ஆகமங்களிற் காணப்படுதலால் வீரசைவ சமயாசாரியர்களுடையகாலம் ஆகமங்களுடைய காலத்திற்கு முந்தியதாக இருத்தல்வேண்டும். ஆதலான், அவர்கள் இந்நிலவுலகத்திற் ரூபித்த மதத்தின்காலமும் மிகத்தொன்மையதாகின்றது.

இவ்வித வைதிக ஆதாரங்கள் பலஇருத்தலன்றியும், பலசரித்திர ஆதாரங்களுங் கிடைக்கின்றன. அவைகளெல்லாம் எழுதப்புகின் ஒருநூலாக விரியுமாதலின் அவற்றை விடுத்து நிகழ்காலத்திற் காணப்படும் அம்மடங்கள் சம்பந்தமான சில குறிப்புகள் மட்டிலும் இங்கே எழுதலாயின.

1-வது அரம்பாபுரி சமஸ்தானம்.

இப்பீடம், மைசூர் நாட்டில் கடூர்ஜில்லாவில் நரசிங்காராஜபுரம் தாலூகாவில் ரம்பாபுரி (பாளேஹொன்னூர்) என்னுமிடத்தில் தலைமைபெற்று விளங்குகின்றது. இம்மடத்தின் முதற்குரவரும் வீரசைவ மதத்தாபனாசாரியர்களில் மிகமேன்மைபெற்றவருமான ஸ்ரீ ஜகத்குரு இரேணுக சிவாசாரியசுவாமிகள் கொல்லிபாகம் சோமநாத லிங்கத்தின்கண் அவதரித்து மலயமலையின் மத்தியில் தம்முடைய பீடத்தைத்தாபித்தனர். இவர் உலகம்போற்றுந் தமிழ்முனியாகிய அகத்தியமுனிவருக்குச் சடுத்தலநெறியை யுபதேசித்து அவர்க்கு இலிங்கதாரணமும் செய்வித்தார் என்பதற்குப் பலசிறந்த காரணங்க ளிருக்கின்றன. இவர் தென்சமுத்திர தீரத்திலுள்ள இராமேச்சுரத் தில் சிலகாலம் எழுந்தருளியிருந்துபின்னர் சோழநாட்டின் தலைநகரா யிருந்த காஞ்சிநகரத்திற் செழுந்தருளி பலவற்புதங்களைச்செய்து சிவ தருமங்களை நிலைநாட்டினர். பின்னர் இலங்கைக்குச்சென்று விபீட ணன் வேண்டுகோளின்படி ஒரேகாலத்தில் மூன்றுகோடி இலிங்கங் களைத் தாபித்து அவனது கருத்தை முடிவுறச்செய்தனர். இவ்வாறு பல திருவிளையாடல்களைச்செய்து பம்பா பருப்பதம் காசி இமாலயம் முதலான சிறந்த தலங்களைத் தமது காட்சியாற் றூய்மையுறச்செய்து முடிவில் தமது பேரருட்டிறத்தால் உருத்திர முனீந்திரர் என்னும் பேரொளி வடிவாகிய குருமூர்த்தியைப் பூ கருப்பத்தினின்றும் அவ தாரஞ்செய்வித்துத் தமதாட்சியை அவர்பாற் கொடுத்து முன்னர்த் தோன்றிய சோமேச லிங்கத்தின்கண்ணேயே மறைந்தருளினர். இவ்வாறு பல சிறந்த நூல்களில் எழுதப்பட்டிருக்கின்றது. இந்த உருத்திரமுனீந்திர சிவாசாரியர்க்குப்பிறகு முக்திமுனீஸ்வர சிவாசா ரியர் திகம்பரமுனீஸ்வர சிவாசாரியர் முதலாக 118 சுவாமிகள் பீடா திபதிகளாக எழுந்தருளியிருக்கின்றனர். இரேணுக சிவாசாரியர் பிரமசூத்திரங்கட்கும் சிவசூத்திரங்கட்கும் பாஷியம் எழுதியிருந் தமை அநேக நூல்களால் வெளியாகின்றது. இந்த பீடத்தில் மிகப் பழமையான சிலாசாசனங்கள் இப்பொழுதும் அழிவின்றி விளங்கு கின்ற நிலைமையில் காக்கப்பெறுகின்றன. இவற்றுள் ஒன்று இராமர் காலத்திருந்ததென்று அதன்கணுள்ள சில குறிப்புகளாற் கண்டறி யப்படுகின்றது. அதுவன்றியும் சுமார் 1800 வருடங்கட்குமுன் னது என்று கருதத்தக்க ஒரு தாமிர சாசனத்தை மைசூர் கவர்ன மெண்டு ஓரிபண்டல்லைபரி (புத்தகசாலை) யின் ஆர்ச்சலாஜிகல் டிபார்

டெமெண்டார் (சிலாசாசனப் பரிசோதக இலாகாதார்) சோதனையி னிமித்தமாக மடத்திலிருந்து எடுத்துக்கொண்டிருக்கிறார்களெனத் தெரியவருகிறது. அத் தாமரசாசனம் தமிழ்மொழியி லிருக்கின்ற தாம். இதன்சம்பந்தமான சோதனையையும் விவரத்தையும் சர்க்கா ராரே வெளியிட்டிருக்கின்றார்களாம்.

இப்பீடம் மிகவடர்ந்த ஆரணியத்திலிருக்கின்றது. இப்பீட மிருக்கின்ற இடத்திற்கு இப்பொழுது மலயபர்வதம் எனப்பெயர் வழங்குகின்றது. இதன் அணிமையிலேயே அகத்திய மகாமுனிவ ருடைய ஆச்சிரமும் இருக்கின்றது.

இந்த பீடாதிபதிகளினால் பிரசித்திபெற்றவரான ஸ்ரீ சங்கராசாரியர்க்கே சந்திரமௌளீஸ்வரலிங்கம் கிடைத்திருக் கின்றது என்ற பொருளில் பல எழுத்துக்களிருக்கின்றன. இவ்விஷ யத்தைக் காட்டுகின்ற இலிங்கப்பிரதானரூபமான ஓர் கல்வெட்டுச் சித்திரமொன்றுகூட இப்பொழுதும் யாருங்காணு நிலைமையில் விளங் கிக்கொண்டிருக்கின்றது.

இப்பீடம் பூருவத்தில் இப்பொழுதிருக்கின்ற இடத்திலில்லா மல் வேறோரிடத்திலிருந்தது. கடந்த அரசர்களிலொருவனான பூகி பசவப்ப நாயக்கன் என்பவன், யாது காரணத்தாலோ - அதனை தீக் கிரையாக்கினன். இப்படி, குருபீடத்திற்குத் துரோகஞ்செய்த தீவினைப்பயனாக அவனுக்குப் பல நோய்களுண்டாயின. அதன்மேல் அவ்வரசன் கழிவிரக்கங்கொண்டு குருமூர்த்தி சந்நிதானத்தைய டைந்து அவரது கருணையைப்பெற்றுச் சுகமடைந்து இப்பொழுதி ருக்கின்ற பீடத்தைத் தானே கட்டிக்கொடுத்திருக்கின்றான். இது சம்பந்தமாக சமஸ்தானத்தில் பல ஆதாரங்களிருக்கின்றன.

இந்த பீடாதிபதிகளிடம் எத்துணையோ அறிவாளிகள் சிறந்த தபசிகளாக விளங்கியிருந்தார்கள்; இருக்கின்றார்கள். இப்பீடத்தின் பெருமையையும் அற்புதத்தையுந்தெரிந்து மைசூர் இராஜாங்கத்தார் சிறப்பிற்கறிகுறியாகப் பல சிறந்த பிருதுகளைக்கொடுத்துதவியிருக் கின்றார்கள்.

இந்த ரம்பாபுரி மகாபீடத்தைச் சார்ந்த இரேவணாராத்திய கோத்திர பரம்பரை யாதீன வீரசைவர்களிற்சிலர் இத்தமிழ்நாட்டின் கண்ணும் உப மடாதிபதிகளாக விளங்கி செட்டியார் என வழங்கும் பண்டகுலாதிபர்கட்கு இலிங்கதாரணஞ் செய்வித்து ஆசாரியராக வாழ்ந்துவந்திருக்கின்றனர். இம்மடாதிபதிகளி லொருவர் திரிசிரபுரம் ஜில்லா வாலிகண்டபுரத்தின் தென்பாலுள்ள துறைமங்கலத்தில் சுமார் 380 வருடங்கட்கு முன்னிருந்த துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் காலத்திற்குமுன்னரே வெங்கனூர் நாட்டார் அண்ணாமலை செட்டியார் மரபினர்க்குக் குலகுருவாயிருந்திருக்கின்றனர். இவரது மடத்திற்குச் சென்னவசய்யர் மடம் எனப் பெயர்வழங்கிவந்தது. இதனருகே சிவப்பிரகாசசுவாமிகட்கு அண்ணாமலைசெட்டியார் மடம் கட்டிக் கொடுத்திருந்தார். இப்பொழுதும் இருதிறத்தினரும் வெவ்வேறிடங்கட்குக் குடியேறினராயினும், துறைமங்கலத்தார் என வழைக்கப்பெற்று ஆசாரியர் சீடர் என்ற முறையில் வாழ்ந்துவருகின்றனர். மற்றவர்விவரம் வெளிப்படின் பின்னர்க் காட்டுதும். இதற்கு சிவப்பிரகாச சுவாமிகள் சரித்திரமும் வெங்கையுலாவுமேயன்றி இரேவணாராத்திரிய கோத்திரமென வழங்குவதும் தம்மக்களுக்கு அப்பெயரிட்டழைப்பதுமான வழக்குகளும் இன்னுஞ் சில சாசனங்களும் ஆதாரங்களாகின்றன.

(தொடரும்)

தென்னாட்டு நிகழ்ச்சிகள்.

மயிலம் தேவஸ்தானம்.

இத்தலம், தொண்டைநாட்டில் மஞ்சகுப்பம் டி. - திண்டிவனம். தா. - ல் உள்ளது. இங்குள்ள மயூராசலத்தில் முருகப்பெருமான் திருக்கோயில் கொண்டெழுந்தருளித் தம் மன்பர்க்கு வேண்டியவரங்களை வேண்டியவாறு கொடுத்தருளுங் காட்சிமிக்க கருணாமூர்த்தியாக விளங்குகின்றார். இஃது, பொம்மபுரம் ஸ்ரீமத் சிவஞானபாலையசுவாமிகளுடைய ஆதீனபரம்பரை தர்மகர்த்தத்துவ ஆட்சியிலிருந்துவருகின்றது. இங்குள்ள மிகப்பழமையான இரதம் சிலமாயிருத்தலின், ஷை ஆதீனம் 18-வதுபட்டம் ஸ்ரீமத் சிவஞான பாலையசுவாமிகள் பெரும்பொருட்செலவில் புதியதாக அழகியதோர் இரதம் செய்வித்துவருகின்றார்கள். சந்நிதானங் கொண்டுள்ள ஊக்கமிகுதியால் வரும் பங்குனி யுத்தரத் திருவிழாவிலேயே புதிய இரதத்தில் முருகப்பெருமான் எழுந்தருளிவரும் திருவுலாக் காட்சியைத் தரிசித்துப் பேரானந்தமுறலாமெனத் தோன்றுகிறது.

கும்பகோணம் பெரியமடம்.

இது, தென்னாட்டின்கண் காணப்படும் மடங்கள் எல்லாவற்றுள்ளும் மிகப் பழமையானது. ஸ்ரீ முருகப்பிரம்ம தர்க்க சாரங்க தேவ தேசிகேந்திர சுவாமிகள் மடாலயமெனக் கல்வெட்டு முதலிய பல சாசனங்களுடன் விளங்குகின்றது. இதற்குப் பல்லாயிரம் சிஷ்யர்களிருந்தும் தற்காலம் பீடாதிபதிக ளில்லாதகுறைவால் இனி விளக்கமுறவேண்டிய நிலைமையிலிருக்கிறது. திருச்சிராப்பள்ளி திருவாளர், அ. க. பசவண்ணசெட்டியாரவர்கள் டிரஸ்டிமானேஜராக இருந்து சில திருத்தங்கள் செய்துவருகின்றார்கள். இதனிடையில் தேவகோட்டையிலிருக்கும் திருவிடைமருதூர் திருப்பணியாளராகிய திருவாளர், மெ. லெ. மெ. இராமநாதஞ்செட்டியாரவர்கள், இம்மடாலயத்தின் கட்டடம் கிரயமூலமாகத் தம்மைச் சாரவேண்டுமென சப் கோர்ட்டில் தாவாசெய்திருக்கின்றார்கள். என்னே வீரசைவ மடாலயத்தின் நிலைமை! இப்பொழுதாயினும் வீரசைவர்களும், மடாதி

பதிகளும் இதன்மேல் கண்ணோட்டஞ்செய்யலாகாதா !! நிற்க சித்ரகல் துர்க்கம் ஸ்ரீமந் நிரஞ்சன ஜகத்குரு ஜயதேவ முருகராஜேந்திர மகாசுவாமிகள், மானேஜர் பசவண்ண செட்டியாரவர்களுடனிருந்து வழக்கைக் கவனிக்கும்படி பெங்களூர் வக்கீல் G. C. வீரப்பா B. A., L. L. B., அவர்களையும், காரியஸ்தருடன் ஒரு சாலிங்கமூர்த்திகளையும் அனுப்பிவைத்திருப்பதாகப் தெரிகிறது.

திண்டுக்கல் தாலூகா சிந்தலக்குண்டில் ஷ மடாலயத்தின் இனும் நஞ்சை 66 ஏகர்கொண்ட நிலத்தை முன்னிருந்த சுவாமிகள் 70-0-0-க்கு சாஸ்வத குத்தகைக்கு விட்டிருக்கிறார்கள் எனவும், இப்பொழுது அந்நிலங்களைக் குத்தகைதாரருக்கே பட்டாசெய்யும்படிப் பிறப்பித்த உத்தரவின்மேல் டிரஸ்டி மானேஜர் செட்டியாரவர்களும் வக்கீல் வீரப்பா அவர்களும் சென்னை ரிவினியூபோர்டில் அப்பீல் செய்திருக்கிறார்கள் எனவுந் தெரியவருகிறது.

நற்பரிசு.

24—5—28, 25—5—28-ல் லால்குடியில் நடந்த தமிழ்நாட்டு வீரசைவ சித்தாந்த மகாசங்கத்தின் ஐந்தாவது விழாவின்கண் சங்கத்தைச் சிறப்பிக்கவந்திருந்தகனவான்களில் லால்குடி தாலூகா போர்டு தலைவர், சைவத் திருவாளர் பா. கிருஷ்ணசாமி ரெட்டியாரவர்கள், ஆங்கு நடந்த கொள்ளேகாலம் தாலூகா போர்டு தலைவர் சிவஸ்ரீ G. P. மல்லப்பா அவர்களது தவப்புதல்வராகிய திருமிகு பாலகந்தருவ G. M. நடராஜய்யாவின் சங்கீத கானத்தைக்கேட்டுப் பெருமகிழ்வுற்று விலையுயர்ந்த தங்கப்பதக்கமொன்றைப் பரிசளித்தார்கள். வீரசைவர்களில் இத்துணை அழகும் அறிவும் அமைதியும் பாடுந்திறமும் இனிமையான குரலும் 13-வயதுள்ள இச்சிறுவர்க்கு அமைந்துள்ள அருமையும், ரெட்டியாரவர்களுடைய வீரசைவ சமயாபிமானமுமே இத்தகைய பரிசு கொடுத்தற்குக் காரணங்களாம். இதுவே நற்பரிசு ! இருவர்க்கும் இறைவர் இன்னருள் பாலிப்பாராக.

காலத்தாற்செய்த வுதவி.

பெருவளநல்லூர் திருவாளர் லா. ச. வைத்திலிங்கய்யாவர்கள் தமக்கு வரும் சித்தாந்த முதலிய பத்திரிகைகளை நம் வீரசைவ நிலையத்திற்கு இனாமாக அனுப்பிவருவதாக வாக்களித்து ஆயுட் சந்தா

வாக ரூ. 25-0-0-ம் அனுப்பியிருக்கின்றார்கள். அன்னார் ஊக்கம் பெரிதும் மதிக்கற்பாற்று. குடியரசு பத்திராதிபரும் தம் குடியரசை மாற்றுப்பத்திரிகையாக அனுப்பிவருவதாக வாக்களித்தமை பாராட்டற்பாலது.

சிவநேசன்.

இஃது, இராமநாதபுரம்ஜில்லா பலவரன்குடியினின்றும் சோமவாரந்தோறும் வெளிவருவதோர் செந்தமிழ் வாரப் பத்திரிகை. இதனைச் சிவனடியார் திருக்கூட்டத்தினர் ஆதரவால் திருவாளர், ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரவர்கள் பத்திராதிபராகவிருந்து நடத்திவருகின்றார்கள். இவ்வதிபர், வேண்டியவளவு இருவகைச் செல்வமும், ஊக்கமும், உறுதியும், சிவநேயமும் உடையவர்களாக இருத்தலின், இப்பத்திரிகையும் சைவ மணங்கமழும் செவ்வியநடையில் அரும் பெருங் கருத்துக்களைத் தன்னகத் தடக்கி உரியகாலத்தே வெளிப்போந்து யாவரும் எளிதிலுணர விளக்கிப் பெரும்பயனை விளைவித்து மகிழ்விக்கின்றது. இறைவன் திருவருளால் இவ்வெளியீடு சிவநேயமுடையார்க்கு அதனை மிகுவித்தும் ஏனையவர்க்குத் தோற்றுவித்தும் எங்ஙனும் நின்று நிலவுவதாகுக.

பூவாளூர் தேவார பாடசாலை.

இந்நகரம் திருத்தவத்துறையை யடுத்தது. திருமங்கலத்தைச் சார்ந்தது. வித்துவான் தியாகராஜ செட்டியார் அவர்கட்குப் பிறப்பிடமாகி அவர்களியற்றிய அறச்செயல்களால் பொலிவுற்று விளங்குவது. இந்நகரின்கண் லால்குடி தாலூகா போர்டு உபத்தலைவரும் தேவஸ்தான கமிட்டித்தலைவருமாகிய சைவத்திருவாளர் L. N. பரமசிவம் பிள்ளையவர்களால் நிறுவப்பெற்ற தேவார பாடசாலையொன்று சிலவாண்டுகளாகச் செவ்வனே நடைபெற்று வருகின்றது. இது அணிமையில் தொடங்கப்பெற்றதாயினும் இதிற் பயிலும் மாணவர்கள் பண்பாடு முறையிலும் இலக்கண விலக்கியப் பயிற்சியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்குதலைக்காணத் தலைவர்கள் கொண்டுள்ள பேரன்பும் ஆசிரியர் கொண்டுள்ள முயற்சியும் பாராட்டற்பாலன வாகின்றன. லால்குடி ஐஸ்கூலில் படிக்க விரும்பும் வீரசைவ மாணவர்கள் குறிப்பிட்ட ஒய்வுநேரங்களில் இப்பாடசாலையிலமர்ந்து பண்பாடு முறையிலுந் திருந்துவார்களாயின் இதுவும் வீரசைவர் முன்னேற்றத்திற்குக் காரணமாகும் என்பதில் ஐயமின்று.

வடநாட்டு நிகழ்ச்சிகள்.

சமூகம் போற்றும் பெரியார்.

பெங்களூர் சிடி. திவான்பகதூர், இராஜசபாபூஷண, சர். செ. பி. புட்டண்ண செட்டியார், கெ. டி; சி. ஐ. இ. அவர்களே, நமது அகிலபாரத வீரசைவ மகாசங்கத்தின் நிரந்தரத்தலைவர். இவர்கள் அறிவும் அமைதியும் பரோபகார சிந்தையும் உடையவர்கள். மைசூர் இராஜாங்கத்தாராலும் வீரசைவ சமூகத்தாராலும் நன்கு மதித்துப் பாராட்டப்பெறுபவர்கள். கர்நாடக தேசத்திற்கே சிறந்த திலகம் போல் விளங்குந் தகமையுடையவர்கள். இப்பொழுது மைசூர் சர்வ கலா சங்கத்தில் உறுப்பினராக விளங்குகின்றூர்கள். இவர்கள் திட காத்திரத்துடன் நீண்ட ஆயுள்பெற்று வாழ்வார்களாக.

ஜகதாசாரியசுவாமி விருபாக்ஷ உடையவர் கருணையும், இரட்டியார்களின் இலிங்கதாரண பக்தியும்.

ஜகத்குரு ஜகதாசாரிய சுவாமி விருபாக்ஷஉடையரவர்கள், விஜாபுரம் ராயசூர் சில்லாக்களில் சில கிராமங்களிலுள்ள இரட்டியார் மரபினருள் 400 – 500 பேர்கட்கு இம்மாத வாரம்பத்தில் இலிங்கதாரண தீக்ஷாசமஸ்காரஞ்செய்வித்து அவர்களைத் தூய்மையராக்கினுர்கள். விஜாபுர பட்டணத்திலுள்ள ராவ்சாஹேப் ஹலகட்டி சாஹேபரும், சங்கரப்பதன செட்டியாரும், பைரவபாடீலரும் ஆகிய கனவான்கள், ஷெ சுவாமிகளைத் தங்களிடத்திற்கழைத்துச்சென்று சுவாமிகளுடைய பல்லக்கு உத்சவத்தைச் சிறப்பாக நடத்திவைத்து, வீரசைவத்தின் வைதீகத்தையும் பரோபகாரத்தையும் யாரும்அறிய உபந்நியாசஞ்செய்யும்படிச் செய்து அங்குள்ள ரெட்டியார், நீலவாணிமுதலிய மரபினர்க்கு இலிங்கதாரண தீக்ஷையைச் செய்வித்துப் புகழ் பெற்றூர்களென்று, ஓர் வீரசைவர் மைசூர் ஸ்டாரில் எழுதியுள்ளார்.

இதனைநோக்க, இங்குள்ளார் சாமானிய தீக்ஷையும் செய்து கொள்ளாதிருப்பது மிக விசனிக்கத்தக்கதன்றே!

வீரசைவ அநாதாலயம்.

பெங்களூரில் பெற்றோரில்லாத பிள்ளைகட்கு ஓர் அநாதாலயமும், மைசூரில் வீரசைவப் பெண்களுக்காகப் பாடசாலையும் ஏற்படுத்தப்பெற்றுப் புதிதாக நடைபெற்றுவருகின்றன.

உ

கணபதி துணை.

திருக்கைலாயபரம்பரைப்

பொம்மபுரம்

ஸ்ரீ சிவஞானபாலையதேசிகராதீனத்து

• நல்லாற்றூர் அல்லது துறைமங்கலம்

சிவப்பிரகாச சுவாமிகள்

அருளிச்செய்த

இஷ்டலிங்கவபிஷேக மாலையும்

அதன் விரிவுரையும்.

இவை

முசிறி உயர்தர கலாசாலைத் தலைமைத் தமிழாசிரியர்

வரகூர்

வீ. குமாரவீரய்யர் அவர்களால்

ஆராய்ந்தெழுதப்பெற்று

குளித்தலை

விவேகபாநு அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

1—1—1929

உ

சிவமயம்.

சிவப்பிரகாச சுவாமிகள் திருவடிவாழ்க.

முகவுரை.

நுண்மாண் நுழைபுலமிக்க பெரியோர்களே !

தவப்பிரகாச சிவப்பிரகாச எம்மடிகளாகிய முனிவர்பெருமானார், இயற்றியருளிய இட்டலிங்க வபிடேகமாலை நிரஞ்சனமாலை என்னும் அரிய நூல்களிரண்டும், பெரும்பான்மையும் சாத்திரக்கருத்துக்கள் அமைந்தனவா யிருத்தலின் அவற்றின் உண்மைப் பொருள்களை யுணர்வான் வேட்கைகொண்டு பலநாளும் பலவிடத்தும் எதிர்பார்த்தும் உண்மையுரை கிடைக்கப் பெற்றிலேன்.

பொம்மபுரம் ஸ்ரீ சிவஞான பாலையதேசிக ராதீனத்துச் சிதம்பரம் ஈசானியமடம் ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள் பதிப்பித்துள்ள பிரபந்தத்தில் வரைந்துள்ள சிறந்த குறிப்புக்கள் என்புன்மதிக்கேற்ப, அரியகருத்துக்களை விளக்குவனவாயின. பின்னர் திருவருட்செயலால் ஷை சுவாமிகள் வைத்திருந்துதவிய பழமையான ஏட்டுப்பிரதியொன்றும், விருத்தாசலம் ஸ்ரீ குமாரதேவர் மடாலயத்திற் கிடைத்த ஏட்டுப்பிரதியொன்றும் அபிடேகமாலைக்கு மட்டிலுங் கிடைக்கப்பெற்றன. இரண்டும் பெரும்பான்மையும் ஒத்திருந்தமையானும், அதனுரையிற் காணப்படும் ஆதார நூல்களில் வீரசைவ தத்துவப்பிரகாசம் ஒன்றைத்தவிர மற்றவை இப்பொழுது கிடைக்காமையானும் அவ்வுரைப்பிரதிகளிலுள்ள சிலவழுக்களை மட்டிலுங் களைந்து அச்சிடவேண்டிய முறையிற் பாகுபடுத்தி யெழுதி அறிவாளர்களின் ஆராய்ச்சிக்கனுப்பு முறையான் இம்மாதவெளியீட்டில் வெளியிடலாயினேன்.

ஆதலின் இவ்வுரையிற் காணப்படும் வழுக்களையும் செய்ய வேண்டிய திருத்தங்களையும் அறிவின்மிக்கார் எடுத்துரைப்பாராயின் அன்னார் நன்றியைப் பாராட்டுதலுடன் திருத்தங்களையும் இதன்வழியாகவே வெளியிடும் உரிமையையுமுடையேன்.

இவ்விரிவுரைசெய்த பெரியார் இன்னாரென எவ்வகையினும் புலனாகவில்லை. ஆக்கியோரே உரைசெய்திருக்கலாமெனவுங்கூறுப.

இங்ஙனம்,

அடியன் வீ. குமாரவீரய்யன்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

இஷ்டலிங்க வபிஷேகமாலை யுரை.

பன்னிருசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பந்தமறு மரர்மிருடர் பவருருத் திரர்களொரு
பதினொருவர் மிளிர்பீடமேற்
படியிலை யைவகைப் படமீசர் தாநிதம்
பத்திலெண் வித்தையிறைவர்
சந்தமுறு கோமுகத் தைங்கலைகள் சத்திசா
தாக்கியம் மூர்த்திவதனம்
தட்டற்ற வட்டத்தி லோட்டற்ற சிற்சத்தி
தாளுற்ற நாளத்திலே
நந்தலற வருகோள கந்திகழ் சிதம்பரம்
நற்சிகையி னிற்சூனியம்
நட்டமற வமைகின்ற விட்டவடி வோடுநின்ற
ஞானமய மோனநடுவோ
டந்தமற முந்துபர மானந்த நீநந்த
வபிடேக மாடியருளே
யறிவுற்றெ னங்கைமலர் செறிவுற்ற மர்ந்த
யபிடேக மாடியருளே. [விறை

இதன்பொருள்:— பந்தம் அறும் - பாசபந்தம் அற்ற,—அரர்- (உருத்திரமூர்த்தியினுடைய இதயத்திலிருந்து அழித்தற்றொழிலைச் செய்விப்பவராகிய) அரர் என்னுந் திருப்பெயர் பெற்றவரும்,— மிருடர் - (விண்டுவினுடைய இதயத்திலிருந்து காத்தற்றொழிலைச் செய்விப்பவராகிய) மிருடர் என்னுந் திருப்பெயர் பெற்றவரும்,—பவர்-(பிரமனுடைய இதயத்திலிருந்து படைத்தற் றொழிலைச் செய்விப்பவராகிய) பவர் என்னுந் திருப்பெயர் பெற்றவரும், — உருத்திரர்கள் ஒரு பதினொருவர் - பதினொருகோடி உருத்திர கணங்கட்குத் தலைவராகிய

1 ஏகாதச உருத்திரர்களும் ஆகிய இவர்கள்,— மிளிர்பீடம் - விளங்குகின்ற அடிப்பீடத்திலும்,— ஐயைவகைப்படும் ஈசர் - சிவமூர்த்தமாகிய சந்திரசேகரர் முதலிய 2 இருபத்தைந்து ஈசர்களும்,— மேற்படியில் - இதற்கு மேற்படியிலும்,— எண்வித்தை இறைவர் - அனந்தர் முதலிய 3 அட்டவித்தியேச்சுரரும்,— நிதம்பத்தில் - இலிங்கத்தின் கண்டமாகிய நடுச்சந்திலும்,— ஐங்கலைகள் சத்தி - நிவர்த்திகலைமுதலிய 4 பஞ்சகலைகளும், இச்சாசத்தி முதலிய 5 பஞ்சசத்திகளும்,— சந்தம் உறு-கோமுகத்து - அழகுற்ற கோமுகமாகிய மேல்வட்டத்திலும்,—சாதாக்கியம், மூர்த்தி, வதனம் - சிவசாதாக்கியம் முதலிய 6 பஞ்சசாதாக்கிய தத்துவங்களும், சதாசிவன் முதலிய 7 பஞ்சமூர்த்திகளும், ஈசானம் முதலிய 8 பஞ்சமுகமாகிய பிரபாவமும்,— தட்டு

1. ஏகாதச உருத்திரர் :— மகாதேவ உருத்திரர், சிவ உருத்திரர், உக்கிர உருத்திரர், கங்கா உருத்திரர், நீலலோகித உருத்திரர், ஈசான உருத்திரர், விசய உருத்திரர், பீமஉருத்திரர், தேவதேவ (சௌமியர்) உருத்திரர், பவோற்பவ உருத்திரர், கபாலீச உருத்திரர் என்னும் பதினொருவர்.

2. இருபத்தைந்து சிவமூர்த்தங்கள் :— சந்திரசேகரர், உமாமகேசர், விருஷபாரூடர். சபாபதி, கல்யாணசுந்தரர், பிக்ஷாடனர், காமாரி, அந்தஹாரி, திரிபுரதகனர், சலந்தராரி, விதித்துவம்சர், வீரபத்திரர், நரசிம்மநிபாதனர், அர்த்தநாரீசர், விக்கிராதரர், கங்காளர், சண்டேசரனுக்கிரகர், நீலகண்டர். சக்கிராபயப்பிரதர், கஜாமுகானுக்கிரகர், சோமாஸ்கந்தர், ஏகபாதர், அநங்கசுகப்பிரதத்துவர், தக்ஷிணாமூர்த்தி, இலிங்கோற்பவர் என்னும் ஈசர்களாவர்.

3. அஷ்டவித்தியேஸ்வரர் :— அனந்தர், சூட்சுமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தி, சிகண்டர், சிகண்டி என்னும் எண்மர்.

4. ஐங்கலைகள் :— நிவர்த்திகலை, பிரதிட்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியாதீதகலை.

5. ஐஞ்சத்திகள் :— இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானசத்தி, ஆதிசத்தி, பராசத்தி.

6. ஐந்து சாதாக்கியம் :— சிவ சாதாக்கியம், அமூர்த்தி சாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம், கத்துரு சாதாக்கியம், கன்ம சாதாக்கியம்.

7. பஞ்சமூர்த்திகள்:—சதாசிவன், மகேச்சுரன், உருத்திரன், விஷ்ணு, பிரமன்.

8. பஞ்சமுகம் :— ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம். சத்தியோஜாதம்.

அற்ற வட்டத்தில் - குறைவற்ற ஆவுடையார் மேல்வட்டத்திலும்,—ஒட்டு அற்ற சிற்சத்தி - ஒன்றிலும் பற்றற்ற நிட்கள சிவத்துக்கு வடிவமாக விளங்கும் அபின்ன சத்தியாகிய சிற்சத்தி,—தாள் உற்றநாளத்தில் - மகாலிங்கத்தின் அடித்தானத்திற் காணப்படும் நாளக்குழியிலும்,—திகழ் சிதம்பரம் -விளங்குகின்ற சிதாகாசம்,— நந்தல் அறவரு கோளகம் - கெடுதலில்லாமல் மேலாக வந்த கோளமாகிய நாளக்குழியைச் சுற்றிய மேல்வரப்பிலும்,—சூனியம் - மிக நுட்பமாக மனம் வாக்குக் காயங்களுக் கெட்டாமல் விளங்கும் வெறும்பாழ்,—நல்சிகையினில் - அதற்கு மேலுள்ள உச்சியிலும்,—நட்டம் அற அமைகின்ற—இங்ஙனம் எக்காலத்தும் கெடுதலின்றிப் பொருந்தியுள்ள,—ஞானமயம்மோனம் - ஞானசொரூபமாயும் பேச்சிறந்த இடமாயும்,—நடுவோடு அந்தம் அற முந்தும் - முதலிடை கடையென்னு மூன்றும் நீங்க எப்பொருள்கட்கும் முதலாக விளங்கும்,—பரம ஆநந்த-பேரானந்தவடிவமாக விளங்கும் மகாலிங்க மூர்த்தியே!— நீ நந்த — நீ (அடியர்பால் அருள்) பெருகும்படி,— அபிடேகம் ஆடியருள் - அடியேன் ஆட்டும் திருமஞ்சன அபிடேகத்தைக் கைக்கொண்டருளும்,— அறிவு உற்று - எனது உடலி னுட்புறத்தே அறிவுருவாக வமைந்திருந்தும் அறிதற்கரும் பொருளாக நிற்குந்தன்மையை நாயடியேன் சிந்திக்கும்படிச்செய்து,— என் அங்கைமலர் செறிவுற்று - எனது உள்ளங்கையாகிய தாமரை மலரின்கண் (கன்மசாதாக்கிய முதலிய தத்துவ மூர்த்திப்பிரபாவ சகளநிட்கள வடிவமான இட்டலிங்கவடிவமாக உள்ளங்கை நெல்லிக்கனிபோலப் புறத்தினுங்கண்டுபூசிக்கும்படி) பொருந்தி,- அமர்ந்த இறை - எழுந்தருளியிருக்கும் இறைவனே! அபிடேகம் ஆடியருள் - அபிடேகத்தைக் கொண்டருளும் என்றபடி.

இந்நூலாசிரியராகிய முனிவர் பெருமானூர் வேதாகம வாக்கியத்திற்கிணங்க, சிந்தாமணியென்னும் மந்திரசாஸ்திரத்திற்கண்டவாறு ஆவுடையாரிலே பீடமுதல் மேல்வட்டமட்டுமுள்ள ஆறு இடங்களிலும் சுத்தமயாதோற்றச் சுவேச்சா ரூபராகிய உருத்திர பேதங்களையும், இருபத்தைந்து மூர்த்தங்களையும், வித்தியாதிபதிகளையும், பஞ்சகலை பஞ்சசக்திகளையும் பீடம் படி நிதம்பம் கோமுகம்என்னும் நான்கிடத்தும் முறையே அடக்கி, சாதாக்கியம் மூர்த்தி வதனம் என்னும் தத்துவ மூர்த்திப் பிரபாவ மூன்றையும் மேல்வட்டத்திலடக்கி, இதுவரை சகள நிட்கள வுருவென்றுணர்த்தி, நாளத்தடியில் சிற்சத்தியையும் கோளகத்தில் சிதாகாசத்தையும் நிட்கள வுருவென்றுணர்த்தி;

சிகையில் சூனியம் என்னும் அதி சூக்கும சுபாவ ரகசியம் அமைந்து நிற்கும் அருமையையும் கூறி விளக்கினர் என்க. இங்ஙனம் மூவகை யாற் கூறவே, அங்கத்தில் தூல சூக்கும காரண மூன்றுமடங்கியிருத் தல்போல இலிங்கத்தின்கண்ணும் தூல சூக்கும காரண மூன்றும் அமைந்துநிற்குந் திறத்தையுங் கூறினராயிற்று.

இன்னும் இவ்விலிங்கத்திற்குத் தத்துவமூர்த்திப் பிரபாவங்கள் ஆகமங்களில் பக்குவபேதத்திற் கேற்றவாறு பலமுறையாகக் கூறப் பட்டுள்ளன; ஆயினும் அவற்றுளெல்லாம் இதுவே அதிநுட்பமா யும் ஒப்பற்றதாயும் இருத்தலின் உண்மைக் கருத்தெனக் கோடல் வேண்டும். வீடுபெறும் வேட்கையுற்றோர் உள்ளும் புறமும் ஏகீப வித்துத் தியானிக்கு நெறியை ஆசாரியர் முகமாக அறிந்துணர்தற் குரியர். இலிங்கபேதங்களும் கற்பபேதங்களால் பலவேறு வகைப் படும்; அவற்றை வேதாகம புராணேதிகாசங்களா னுணர்க.

பூர்வசைவத்திற் கிரியா பூசையில் இலிங்கபூசைக்கு அகோர சிவாசாரியார் பத்ததிமுதலிய பதினெட்டுப் பத்ததிகளினும், ஆகம விதிப்படி ஆதாரசத்தி முதலிய பதுமபீடங்களும், சசினியாதியான அட்டத்திரிம்சத் கலாநியாசமும், மண்டலத்திரயமும், கண்டபங்கி முண்டபங்கி வத்திரபங்கி கலாபங்கி முதலிய தானபேதங்களும், பஞ்சப்பிரம மந்திரங்களும், முகமும் திக்குபேதமாக நிற்குமடைவும், இருதயம் சிரசு சிகை கவசம் நேத்திரம் அஸ்திரம் ஆனமூலமாதி சடங்கமும் ஆகப் பதினொருவிதமான முதலாவரணமும், இதற்குச் சதாசிவத் தியாநாதிகளும், துதியாவரணம் திரிதியாவரணம் சதுர்த் தாவரணம் பஞ்சாவரணமாக விதித்து அதற்கு ஆவரண தேவதைக ளாதியான பூசையின் விரிவும் வேறுவேறு கூறிச் சவுராதி சண்டேச பூசைபரியந்தம் மிசிரபூசை யென்றும், சத்தி விக்கிரகமாத்திரம் இலி ங்கத்துடன் வைத்து பூசிப்பது கேவல பூசையென்றும், பிரதமாவர ணமாத்திரம் பூசித்துப் பதினொரு மந்திரத்தால் இலிங்கத்தை மாத் திரம் பூசிப்பது சுத்தபூசையென்றும், இலிங்கத்தில் எவ்வெத்தெய்வ ங்களை நினைத்துப் பூசிப்பினும் அவ்வத் தெய்வங்களெல்லாம் அதினி ன்றுந் தோன்றி வேண்டியவற்றைக் கொடுக்குமென்றுங் கூறுதலின் இவையெல்லாம் சகள நிட்கள மிரண்டிற்கும் பொதுவாயிருக்குமெ ன்றுணர்க.

இது, உத்தர சைவர் (வீரசைவர்)க்குரிய மோக்ஷகாரணமான ஞானபூசையாகலின் மந்திரகாண்டத்தில் ஞானபாதத்தில் எடுத்துக் கூறினாரென்க. இன்னும் இலிங்கத்திற்குத் திரிகண்டஞ் செய்து ஆத்துமதத்துவம் வித்தியாதத்துவம் சிவதத்துவமாக்கியும் அவற்றிற்கு அதிதேவர் பிரமா விஷ்ணு உருத்திரரென்றும், நாத விந்து கலையென்றும், இஷ்டபிராண பாவமென்றும், அகார வுகார மகாரமென்றுஞ் சொல்லப்படும். அன்றியும் ஐந்துவிதமாக்கி ஐம்பொறி லிங்கம் பஞ்சவர்ணலிங்கம் பஞ்சகிர்த்தியலிங்கம் பஞ்சப்பிராணலிங்கம் என்றுஞ் சொல்லப்படும். ஆறுவிதமாக்கி ஆறாதாரங்களினும் ஆசாரலிங்கம் குருலிங்கம் சிவலிங்கம் சரலிங்கம் (சங்கமலிங்கம்) பிரசாதலிங்கம் மகாலிங்கம் என்றும், ஆறுவித பக்தி சக்திகளை அங்கம் அத்தம் தலம் கந்தம் சுவை நிறம் என்றும் இப்படி அறுவகையான கிரியாபேதங்களாகக் கொண்டு பூசிக்கப்படுமென்றும், ஆகாசமயலிங்கம் சோதிமயலிங்கம் என்றும் இவைகட்கெல்லாம் ரூபாரூபமாகிய சதாசிவமே தெய்வமென்றும் சொல்லப்படும்.

இன்னும் க்ஷணலிங்கம் நவலோகலிங்கம் பாஷாணலிங்கம் நவரத்தினலிங்கம் பாணலிங்கம் பிரதிஷ்டாலிங்கம் சுயம்புலிங்கம் கிரியாலிங்கம் இச்சாலிங்கம் ஞானலிங்கம் உருவலிங்கம் அருவலிங்கம் உபயலிங்கம் சரலிங்கம் அசரலிங்கம் போகவியாங்கலிங்கம் எனப் பலவகையாகப் பகுத்துரைப்பனவெல்லாம் அவரவர் பக்குவத்திற்கேற்ற பாவனைக்கு ளகப்பட்டவையாய் நிற்கும். இவை இவ்வாசிரியர் கூறிய இலிங்கத்தின் பாணவட்டத்திற்குளடங்கி நிற்கும்.

இந்த இலிங்கம் பாவனாதீதமாய் மூவிதவுருவுநீங்கி ஞான ஞேய ஞாதிருவுங் கடந்துநிற்கும்; இதனை அதர்வண வேதமந்திரமுடிவினாலும், சிவார்ச்சனாசந்திரிகை, சிவாக்கிரமணிதீபிகை, வீரசைவதத்துவப்பிரகாசம், மந்திரசாஸ்திரம் லிங்காயத வுபநிஷத்து, சதாசிவ விளக்கம், தத்துவமூர்த்திப் பிரபாவம் முதலிய சாஸ்திரங்களினாலும், ஆகமங்களின் உத்தரபாகங்களினாலும் குருமுகமாகக் கேட்டறிக.

இதனுள் இருப்த்தைந்து மூர்த்தமும் கிரியாலிங்கத்துளடங்கும் ; கிரியாலிங்கமான சகள நிட்கள லிங்கமும் இவர்கூறிய சூனிய லிங்கத்தினுடைய அடிப்பீடத்தின் மேற்படியின்கண் அடங்கி நிற்றலைக்காண்க.

அபரநாதம் அபரவிந்து அபரகலை, பரநாதம் பரவிந்து பரகலைசகிதமான பாவலிங்கமுங் கடந்து, சின்னாதம் சித்விந்து சித்கலையுந் தாண்டி நிரஞ்சன சூனிய நிட்களமான லிங்கம் இதுவே. குணங்குறி கடந்ததுமிதுவே. இது முத்திவடிவாகலின் சதாசிவ மூர்த்தமான கன்ம சாதாக்கிய லிங்கத்திற்கு முயிராதலறிக. காய கரண-பாவமுங் கடந்து நிற்குமென்றது இதுவேயெனத் தெளிக. இதன்றன்மையெல்லாம் சோமநாத ஆராத்தியர் பத்ததியினும் சின்மயதீக்ஷாவிதியினும் பரக்கக் காணலாம். இது பிரம நிச்சயங் கூறியதென்றுணர்க மிளிர்பீடம், உறுகோளகம் இவ்விரண்டும் — வினைத்தொகை. பரமானந்த, அமர்ந்தவிறை - இவ்விரண்டும் அண்மைவிளி; " அண்மையினியல்பும் ஈறழிவும் " என்பது சூத்திரம். நடுவோடந்தம் எனவே ஆதியும் கொள்ளப்பட்டது ; உபலக்ஷணம்.

இதுவரையுங் கூறியவாற்றான் இவ்விஷ்டலிங்கமே எவ்வகை மூர்த்திகட்கும் மூலமென்பதூஉம், ஆகமங்கள் பக்குவ பேதத்திற்கேற்றவாறு பலதிறப்படுமென்பதூஉம், அவையெல்லாம் ஆகமங்களின் உத்தர பாகத்தின் முடிந்த முடிபிற்கு உட்பட்டிருக்குமென்பதூஉம், பூர்வ சைவர்க்குக் கிரியா பூசையில் சிவலிங்கபூசை ஆவரண பூசை முதலியவற்றாற் பலதிறப்பட விரியுமென்பதூஉம், அவர்க்குச் சகள நிட்களமாகிய சதாசிவ மூர்த்தியே தியான மூர்த்தியென்பதூஉம், உத்தர சைவராகிய வீரசைவர்க்கு ஞானபூசையில் இஷ்டலிங்கபூசை ஒடுக்க முறையான் ஒருதிறப்பட்டு நிரஞ்சன சூனியநிட்கள லிங்கமே தியானமூர்த்தியா மென்பதூஉம், இதனாசிரியர் கருவிலே திருவுடையராய் முற்றத்துறந்த முனிவர் பெருமானாதலின் வேதாகம மந்திர சாஸ்திரங்களின் முடிந்த முடிபைத் தங்கருணைப்பெருக்கால் அருளினாரென்பதூஉமாகிய இன்னோரன்ன பல அரிய கருத்துக்கள் உணரலாயின. (க)

(தொடரும்)

இதுவரை ஆயுட்சந்தாதாரராகக் கையொப்பமிட்டவர்கள்.

1.	பொம்மயபாளயம்	திருவாளர்	ஆ. பொன்னுசாமி ஐயரவர்கள்.
2.	திருச்சிராப்பள்ளி	,,	அ. க. பசுவண்ணசெட்டியாரவர்
3.	விருத்தாசலம்	,,	கந்தசாமி ஐயரவர்கள். [கள்.
4	பெருவளநல்லூர்	,,	லா. ச. வைத்திலிங்க ஐயரவர்கள்
5.	சிவந்தாம்பட்டி	,,	அ. குழந்தைசாமி ஐயரவர்கள்.
6.	குகையூர்	,,	K. கந்தசாமி ஐயரவர்கள்.
7.	இளங்காடு	,,	K. சாமிநாத ஐயரவர்கள்,
8.	திருமானூர்	,,	S. பொன்னுசாமி ஐயரவர்கள்.
9.	தளவாப்பட்டி	,,	T. S. மாசிலாமணி ஐயரவர்கள்.
10.	ஆற்றார்	,,	S. தெய்வசிகாமணி ஐயரவர்கள்.
11.	மாதங்கச்சேரி or செல்லிபாளயம்	,,	A. இராமலிங்க ஐயரவர்கள்.
12.	லாடபுரம்	,,	P, ஐயாவையரவர்கள்.
13.	குமுழூர்	,,	C. சபாபதி ஐயரவர்கள்.
14.	முசிறி	,,	வீ. குமாரவீரய்யரவர்கள்.
15.	காருகுடி	,,	S. முத்துசாமி ஐயரவர்கள்.
16.	சொரத்தூர்	,,	S. வேலாயுத ஐயரவர்கள்.
17.	சிதம்பரம்	,,	இ சிவராமையர் அவர்கள்.
18.	அரும்பாவூர்	,,	சிவப்பிரகாச ஐயரவர்கள்.
19.	கீரம்பூர்	,,	சிவசங்கரய்யரவர்கள்.
20.	சிதம்பரம்	,,	C. பாலய்யரவர்கள்.
21.	சிதம்பரம்	,,	S. பொன்னுசாமி ஐயரவர்கள்.
22.	குகையூர்	,,	K. S. சின்னசாமி ஐயரவர்கள்.
23.	பெருவளநல்லூர்	,,	வீ. சுப்பையரவர்கள்.
24.	பிச்சநத்தம்	,,	பொன்னுசாமி ஐயரவர்கள்.

விளம்பரம்.

சித்தாந்த சிகாமணி விரிவுரை.

—(o)—

இஃது வடமொழியில் சிவயோகிராட் என்னும் முனிவரால் செய்யப்பெற்றுள்ளது; துறைமங்கலம் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளால் தமிழில் செய்யுள் வடிவமாகமொழிபெயர்க்கப்பெற்றது. இதன்கண் வீரசைவ சடுஸ்தல வுண்மைகள் முதலிய அரிய சாஸ்திரக்கருத்துக்கள் விளங்குகின்றன. இதற்கு பல ஆகம ஆதாரங்களுடன் விரிவுரை யொன்றெழுதி ஆப்டோன் படங்களுடன் கண்கவர்வனப்பினதாய் சென்னை திருவாளர், செ. நாசிசெட்டியாரவர்கள் அச்சிட்டிருக்கின்றார்கள்.

வசவபுராண விரிவுரையும் அச்சிலிருக்கிறது.

கிடைக்குமிடம்.—

செ. நாசி செட்டியார் அவர்கள்,

குருபசவ அண்டு கம்பெனி,

பார்க் டவுன், சென்னை.